துணை முதல்வர் பிறந்த நாள்: பூபதி வெங்கடேசன் தலைமையில்

# 139 அ வட்டத்தில் தெருமுனைக் கூட்டம்! அமைச்சர் மா.சுப்பிரமணியன் நல உதவிகள் வழங்குகிறார்!

## திருச்சி சேகர் - வெ.சரண்யா சிறப்புரை! தமிழச்சி தங்கபாண்டியன் - மு.மகேஷ்குமார் பங்கேற்பு!

சென்னை, டிச. 24 -

உதயநிதியின் உதயநாளை முன்னிட்டு சைதை மேற்கு - 139 வது "அ" வட்டத்தில் வட்ட பொருளாளர் பூபதி வெங்கடேசன் தலைமையில் தெருமுனைக்கூட்டம் நடைபெறுகிறது.

எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., சை.மு. சேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார். திருச்சி சேகர், வெ.சரண்யா சிறப்புரையாற்றுகின்றனர். இதில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு. மகேஷ்குமார் பங்கேற்கின்றனர்.

உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உதயநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதி 139வது "அ" வட்ட தி.மு.க. சார்பில் வட்ட பொருளாளர் பூபதி வெங்க டேசன் தலைமையில் பகுதி கழக செயலாளரும் மண்டலகுழு தலை வருமான எம்.கிருஷ்ண மூர்த்தி, பொதுக்குழு உறுப்பினரும், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., 139வது "அ" வட்ட கழக செயலாளர் சை.மு.சேகர், ப.சுப்பிரமணி எம்.சி. ஆகியேதார் முன்னிலை வகிக்கின்றனர்.

டி.என்.சிவமணி, இ.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், சுமதி தீனதயாளன் ஆகியோர் வரவேற்பில் 25.12.2024 புதன்கிழமை மாலை 6 மணியளவில் சாரதி நகர், மேற்கு சைதாப்பேட்டை பேருந்து நிலையம் அருகில் தெருமுனைக்கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக செயலளாரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன் பயனாளிகளுக்கு நல உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகின்றார்.

மேலும் இக்கூட்டத்திற்கு தலைமைகழக சொற்பொழிவாளர்கள் திருச்சி சேகர், வெ.சரண்யா, முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ்குமார், மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன், சைதை தொகுதி மேற்பார்வையாளர் பரிதிஇளம்சுருதி, பொதுக்குழு உறுப்பினர் சைதை மா.அன்பரசன் ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

பகுதி கழக நிர்வாகிகள் களக்காடிஎல்லப்பன், வி.பி. ஜானகிராமன், த.சம்பத், ஆர். ரமேஷ், கவிதாகௌதமன், வட்டகழகசெயலாளர்கள் அட்கோகமலநாதன், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம். நாகா, மாவட்டஅமைப்பாளர்கள் சைதைசாதிக், எம்.எஸ். ஹரிபாபு, ஆர்.கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், மாவட்ட பிரதிநிதிகள் ஜி.கே. ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பொன்ஜெய்சிங், கிண்டிசெல்வம், கு.புகழ்வேந்தன், ஆர். ரவி, பால்கார்ரவி, ஜி.பாபு, 139வது "அ" வட்ட பகுதி பிரதிநிதிகள் கொடிசுரேஷ், டி. கோபாலகிருஷ்ணன், ஜி.ஏழுமலை, எஸ்.முகமதுஅலி, யமஹா ராஜேஷ், வட்டசெயற்குழு உறுப்பினர் ப.சிவகுமார், கே.விஜயகுமார், வி.வாசுதேவன், என்.ரமேஷ், எஸ். கண்ணன், ப.எழிலரசன், ஆர். பெருமாள், ஆர்.தாமோதரன், எஸ்.சையத்ஜலால், எஸ்.சரத்குமார், 139வது வட்ட கழக நிர்வாகிகள் மு.கதிரவன், பொ. பரத்குமார், பி.எஸ்.முருகன், சாந்திசுந்தரம், அ.அயா த் பாஷா, ஆ.சுப்பிரமணி, சி.டி. காசிநாதன், வி.சபரி, து.முரளி, எல்.சந்திரன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் வெ.புருஷோத்தமன், என்.தீனதயாளன், ப.நரேஷ், ஏ.எஸ்.பழனி, எம்.எஸ்.மணி, பகுதி அமைப்பாளர்கள் ஜிம்பிரபு, சார்புசரவணன், பூ.பாஸ்கர், துணை அமைப்பாளர்கள் ஜோ.அந்தோணி, வி.வெங்கடேசன், இ.வ.ரகுபதி, எம்.சுந்தரேசன், கே.பாரி, துளசி, சந்திரசேகர், மு.காத்தவராயன், ஆட்டோ சேகர், வி.ஆதிகேசவன்,

த.சேகர், ஜி.நாகதேவி, கே.வெங்க டேசன், ஜி.தங்கராஜ், கே.மணிகண்டன், டி. சரவணன், என்.எஸ்.கார்த்திக், த.வின்செண்ட், இளைஞர் அணி நிர்வாகிகள் ஜி.ரஞ்சித், து.வடிவேலன், சேகர்நகர் ஆர். ஞானவேல், எஸ்.பி.தினேஷ், கழக முன்னோடிகள் என்.சண்முகம், மு.மூர்த்தி, பா.மோ. கார்த்திக், பி.ராமதாஸ், கா.மூர்த்தி, து.மா.பொ.சி. போட்டோரவி, கோ.லட்சுமணன், ப.தினகரன், எஸ்.ஏழுமலை, பி.பாலு, எஸ்.வி.நடராஜ், மு.பாஸ்கர், கே.பி.சிவா, பா.வெங்கட்ராமன், மூ.வினோத்கண்ணா, வி.பி.ஜோதிராமலிங்கம், ஆர்.கன்னியப்ன், க.ராஜேந்திரன், பு.உதயநிதி, எம்.சக்திவேல், ஆர்.கல்யாணசுந்தரம், டி.ஜானகிராமன், எஸ்.கிருஷ்ணமூர்த்தி, பி.ஜெகதீஷ், பி.யுவராஜ், எம்.சதீஷ், நியூகாலணி சம்பத், வி.பி.சிவகுமார், சைதைசத்யா, ராஜா, ஆறுமுகம், டைலர்சுரேஷ், ஏழுமலை, கே.கே.நகர் விநாயகம், இ.ராதாகிருஷ்ணன், க.ச.லட்சுமிகுரு, எஸ்.சந்தானகிருஷ்ணன், டி.நந்தகுமார், கொரியர்சுரேஷ், அ.அன்பு, மோகன், அ.அருண், வழக்கறிஞர் எஸ்.நந்தா, டி.எஸ். மகேஷ், ஏ.ஆனந்த், விஜி, எஸ். ரவிக்குமார், ரவிச்சந்திரன், எம்.தேவா, சுரேஷ், கஜா, ஜி. வேலு, ஆர்.கணபதி, வெங்கட், ஷாம், என்.பாபு, ரவி, சி.கண்ணன், சுந்தரம், அலெக்ஸ், கெ.சந்துரு, கே.ரமேஷ், எம். சதீஷ், எம்.ஸ்ரீதர், ஜே.அந்தோணி, சீனு, கணபதி, பி.வி. மோகன்,ஆகியோர் பங்கேற்று இக்கூட்டத்தினை சிறப்பிக்க உள்ளனர்.

ஆயில் எம்.சரவணன் நன்றி கூறுகிறார்.




சென்னை, கிண்டி சிட்கோ அலுவலகக் கூட்டரங்கில் நேற்று (23.12.2024) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் மாவட்ட தொழில் மைய பொதுமேலாளர்களின் பணித் திறனாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல் ஆனந்த், தொழில் வணிக ஆணையர் நிர்மல் ராஜ், கூடுதல் தொழில் வணிக ஆணையர் சிவ சௌந்திரவள்ளி, கூடுதல் தொழில் வணிக இயக்குநர்கள் திருமதி ரேஷ்மா, ராமசுப்பிரமணியன், ஏகாம்பரம், தாய்கோ வங்கின் முதன்மைச் செயல்அலுவலர் ரவிச்சந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. 15ஆவது பொதுத்தேர்தல் - தஞ்சை தெற்கு மாவட்டம் -

## மாவட்ட பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல் - தேர்தல் முடிவு!

### தலைமைக் கழக அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், தஞ்சை தெற்கு மாவட்டம், பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்.எச்.அஸ்லம் அவர்கள் அதிராம்பட்டினம் மேற்கு நகரக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால்; தஞ்சை தெற்கு மாவட்டம், மாவட்ட பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, டிசம்பர் 22 (ஞாயிற்றுக்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்." என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி; தஞ்சை தெற்கு மாவட்டம், மாவட்டப் பொருளாளர் பொறுப்புக்கு எஸ்.கே. செந்தில்குமார் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு, தஞ்சை தெற்கு மாவட்டம், மாவட்டப் பொருளாளராக, எஸ்.கே. செந்தில்குமார், 11, அரசு மருத்துவமனை சாலை, பட்டுக்கோட்டை - 614601. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.12.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# இத்தரை உள்ளவரை இயங்குவார் பெரியார்!



**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

**பெரி**யாரின் எழுச்சியால்தான்
பெரும்பழந் தமிழ்நாட்டில்
சரிநீதி சமூகநீதி
தழைத்தின்று வாழ்கிறது;
உரிமைக்குக் குரல்கொடுக்கும்
உணர்ச்சிதான் வளர்கிறது;
மரியாதை பகுத்தறிவு
மக்களிடம் மிளிர்கிறது;
புரிநூலார் கொட்டந்தான்
புதையுண்டு போகிறது;
நரித்தன நயவஞ்சர்
நஞ்சுதான் அழிகிறது;
பிரித்தாளும் அவர்சூழ்ச்சி
பேடிமையாம் சனாதனம்
உரித்தெடுத்துப் பெரியாரே
உதறியதால் ஒழிகிறது!

சரிந்தவர் தாழ்ந்தவர்
தலைதூக்க முடிகிறது;
புரியாமல் அறியாமை
புதராக மூடிட
அரிந்தெடுத்து வேரோடு
அகற்றியதால் மடிகிறது;
கரியபேர் இருள்விலகிக்
கதிரொளி படிகிறது!
தெரிந்தநல் பகுத்தறிவுச்
சிந்தனை உயர்கிறது!

சாதியில்லை, மாந்தருள்
தாழ்வில்லை; உயர்வில்லை,
பேதமில்லை, பிளவில்லை,
பிரிவில்லை இழிவில்லை!
ஆதியிலே இல்லாமல்
ஆரியர் வருகையால் பாதியிலே
புகுந்ததிந்தப் பாகுபாடு; வேறுபாடு!

வேதியரை உயர்த்தியே
வேதங்கள் போற்றியே
சூதினால் உருவான
தொடர்சுழல் படர்அழல்
தீதினை, திரிபினை,
தீண்டாமைச் சிறுமையை
மோதியே அழித்திட
முடிவெடுத்த பெரியார்தான்
நீதியே இல்லாமல்
நிலவிய வைக்கத்தில்
நாதியற்ற மக்களுக்கு
நம்பிக்கை ஊட்டியே
வீதியில் நடந்திட
விலங்கிட்டுச் சிறைப்படுத்தித்
தீதினைச் சனாதனர்
செய்தாலும் தளராமல்
பாதியிலே கைவிடாமல்
பழந்தெருவில் பலரோடு
வாதிட்டுப் போராடி
வகையைச் சூடியது
சேதியன்று, புரட்சியெனும்
செயலாகும் தீர்வாகும்!

ஆங்கிலர்க்கு எதிராக
அணிதிரண்ட காலத்தில்
காங்கிரசில் தலைவராகிக்
கண்டிப்பாய் இயங்கியவர்;
வாங்கியே ஏமாற்றி
வாழ்ந்திட்ட கூட்டத்தைத்
தூங்காமல் செய்தவர்;
துளைத்தடுத்து விட்டவர்!
ஆங்கிதனால் இவர்கருத்தை
ஆதரிக்க மறுத்தனர்!

தீங்குக்கள் கடைமறியல்
தீண்டாமைத் தீதெதிர்த்தல்
நீங்கவேண்டும்
தாழ்வுயர்வு
நிலைக்க வேண் டும்
சமவுணர்வென்று
ஓங்கியே குரல்கொடுத்தார்,
ஒவ்வாதார் தமைஎதிர்த்தார்!

தேங்காய்கள் காய்க்கின்ற
தென்னைமரம் ஐந்நூறு
ஈங்கிருந்தால் கள்இறக்கும்
எண்ணமெழும் என்றவற்றை
ஏங்காமல் வெட்டியே
எறிந்தபெருந் தியாகியவர்!

தேங்காமல் விடுதலைக்குச்
சிறந்ததொண் டாற்றியவர்;
தாங்காமல் ஆரியச்
சதிகளைப் பெரியார்தான்
காங்கிரசை நீங்கினார்,
சீர்திருத்தக் கழகத்தைப்
பாங்காக நிறுவினார்!
பலமடமை நீக்கினார்!

மானமும் அறிவுமே
மாந்தருக்கு அழகென்ற
ஞானத்தைப் பரப்பினார்
நற்றமிழ் நாட்டிலே!
ஊனமாம் அறியாமை
ஒழித்திட மக்களிடம்
ஆனமட்டும் போராடி
அறிவுலகைத் திறந்தவர்!
ஈனநிலை மறைந்திட
இனமானம் சிறந்தவர்!

பெரியாரின் பெரும்பேறு
பேரறிஞர் அண்ணா
சரியாக அவரையே
தலைவராகக் கொண்டதுதான்!
பிரிந்தாலும் அவர்கொள்கை
பிறழாமல் போற்றியவர்!
பரிந்துபல செயல்களைப்
பக்குவமாய் ஆற்றியவர்!
விரிந்தாலும் வானம்போல்
விளங்கியவர்! கலைஞரன்று
இருந்தாண்ட காலமுதல்
இன்றுவரை தளபதியும்
வரிந்திங்கே பெரியாரின்
வகுத்தகொள்கை ஏற்றுகின்றார்!
வெண்தாடிப் பெரியார்தாம்
விளம்புவன எல்லாமே
உண்மையன்றி வேறில்லை;
உதவாதது ஒன்றில்லை;
திண்மையாய் விடுதலையைச்
சிந்தித்த பெருந்தவர்;
புண்பட்ட சமுதாயம்
புதுப்பிக்கும் மருந்தவர்;
பண்படத் தன்மானம்
பகுத்தறிவு விருந்தவர்;
மண்படும் அறியாமை
மடமைகளை விலக்குபவர் ;
கண்படும் ஒன்றுதான்
கருத்தெனத் துலக்குபவர்;
விண்ணுலகக் கதைகளோ
வெறும்புனைவு தரும்கனவு!
பெண்ணுரிமை வேண்டியே
பெரிதாக நின்றவர்!

எண்ணுங்கள், உண்மையெனில்
ஏற்றிடுங்கள் என்பவர்;
பண்ணுங்கள் புதுவுலகம்;
பலருக்கும் பொதுவுலகம்,
நண்ணுங்கள் அறிவுலகம்;
நமக்கதுவே சரிஉலகம்!
கண்துஞ்சும்இறுதிவரை
கருத்துகள் வழங்கியவர்!
பெரியார்க்குப் பின்னிந்தப்
பேரியக்கம்
இல்லாமல்
கரியாகிப் போகுமெனக்
கனவுகண்டோர் ஏமாந்தார்!
சரியாக மணியம்மை
தலைமையேற்றுச் செயற்படத்
துணிவான வீரமணி
துணையிருக்கப் பிறகவர்
கணித்தபடி இயங்கியே
கழகத்தை வளர்க்கின்றார்!
பிணியான அறியாமைப்
பெருநோய்தான் தீரவே
அணிதிரட்டி எழுகின்றார்;
ஆரியத்தார் விழுகின்றார்!

மதத்தாலே கேடுகளை
மாநிலம் எங்கணும்
விதைக்கின்றார்,முட்களே
விளைந்திடல் எண்ணியே
புதைக்கின்றார் ஒவ்வொரு
பொய்யாகப் பெரியார்தான்!
கதைக்கின்றார் அவரெலாம்
காவியெனும் பாவிகளே!
உதைக்கின்றார் மக்களென
உருவானால் அன்றிஇவர்
வதைக்கின்றார் என்றநிலை
வளருமென்பார் பெரியாரே!

காசுக்கு விலைபோகும்
கயவரே பெரியாரை
ஏசுவர்,எதிர்த்துரைப்பர்,
இழிவுதான் செய்வதுபோல்
பூசுவர் கருமையை;
போடுவர் போர்வையை,
வீசுவர் சாணியை,
மூடுவர் கோணியை;
தூசுகள்,தும்புகள்
துரும்புகள் இவற்றாலே
மாசுகள் ஏற்படுத்த
மடையரால் முடியாது!
கூசுவர் அறிவிருந்தால்;
கூனியும் குறுகியும்
தாசராய்க் கிடந்தோரைத்
தன்மானம் மிக்கோராய்
வாசமுள்ள மனிதராய்
மாற்றியவர் பெரியாரே!
ஈசல்கள் எதிர்ப்பவர்;
எழுகதிரால் அழிபவர்!

வீசுகிற காற்றாக
வேட்கைதீர் நீராக,
பூசுகிற இருளோட்டிப்
பொழிகின்ற கதிராக
ஈசனை மறுக்கின்ற
ஈ.வே.ரா பெரியாரைப்
பேசுவோம், பாடுவோம்
பெரும்புரட்சி யாளரென
மாசிலாப் பெரியாரின்
மாண்புகளைப் போற்றுவோம்!

பித்தர்கள் என்னதான்
பேசினும் பிதற்றினும்
புத்தர்போல் ஏசுபோல்
புவியிலே எந்நாளும்
வித்தகப் பெரியாரே
விளங்குவார்; அறிவுலகம்
மெத்தவும் போற்றிட
மிளிருவார், இவ்வுலகம்
நித்தமும் போற்றுமே;
நிகரிலர்என்று
ஏற்றுமே!
இத்தரை உள்ளவரை
இயங்குவார் பெரியாரே;
சித்தரவர் மறையாமல்
திராவிடமாய்த் திகழ்வாரே!

# பொறியாளர் அணியின் புதிய மண்டலங்கள் & பொறுப்பாளர்கள்!

## அணியின் செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

திராவிட முன்னேற்ற கழக
பொறியாளர் அணி

கழக ஒருங்கிணைப்பு குழுவின் ஆலோசனையின் படி, கழகத்தலைவரின் ஒப்புதலுடன் பொறியாளர் அணியில் ஏற்கனவே இருந்த 9 மண்டலங்கள் 12 மண்டலங்களாக பிரிக்கப்படுகின்றன. கீழ்க்கண்டவாறு அந்த மண்டலங்களுக்கான மாவட்டங்கள் ஒதுக்கப்பட்டு அதற்கான பொறுப்பு மண்டல நிர்வாகிகளும் நியமிக்கப்படுகிறார்கள்.

| பெயர் | மண்டலங்கள் & மாவட்டங்கள் |
|---|---|
| **துரை.கி.சரவணன்,பி.இ,எம்.பி.ஏ-** தலைவர்<br>**எஸ்.கே.பி.கருணா பி.இ. எம்.பி.ஏ -** செயலாளர் | **திருவண்ணாமலை மண்டலம்**<br>திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு, வேலூர், திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு. |
| **கு.சண்முகசுந்தரம் பி.இ, எம்.பி.ஏ,** மாநிலத் துணைச்செயலாளர் | **கோவை மண்டலம்**<br>கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், திருப்பூர் வடக்கு , திருப்பூர் தெற்கு, நீலகிரி |
| **இரா.நரேந்திரன், பி.இ, எம்.எஸ் -** மாநிலத் துணைச்செயலாளர் | **சென்னை மண்டலம்**<br>சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு |
| **வே.உமாகாந்த், பி.இ, எம்.பி.ஏ** மாநிலத் துணைச்செயலாளர் | **திருவள்ளூர் மண்டலம்**<br>திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, இராணிப்பேட்டை |
| **சி.பிரதீப், பி.இ, எம்.பி.ஏ, பி.எச்டி, எல்.எல்.பி (யு.கே)** மாநிலத் துணைச் செயலாளர் | **கடலூர் மண்டலம்**<br>கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, புதுச்சேரி |
| **இரா.ப.பரமேசுகுமார் பி.இ ,** மாநிலத் துணைச்செயலாளர் | **திருச்சி மண்டலம்**<br>திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு |
| **ஆர்.வி.எல்.இரவிச்சந்திரன், டி.சி.இ** மாநிலத் துணைச்செயலாளர் | **தஞ்சை மண்டலம்**<br>தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, காரைக்கால் |
| **கலை.கார்த்திகேயன், பி.இ** மாநிலத் துணைச்செயலாளர் | **மதுரை மண்டலம்**<br>மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மாநகர், திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு, தேனி வடக்கு, தேனி தெற்கு |
| **அம்பாள்.நந்தகுமார், டி.சி.இ** மாநிலத் துணைச்செயலாளர் | **ஈரோடு மண்டலம்**<br>ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, கரூர். |
| **வெற்றி.ஞானசேகரன், டி.சி.இ** மாநிலத் துணைச்செயலாளர் | **சேலம் மண்டலம்**<br>சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு |
| **பி.அன்பழகன், டி.சி.இ** மாநிலத் துணைச்செயலாளர் | **தூத்துக்குடி மண்டலம்**<br>தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு |
| **எம்.பி.ராஜவர்மன்,எம்.டெக், எம்.எஸ்,பி.எச்.டி** மாநிலத் துணைச்செயலாளர் | **நெல்லை மண்டலம்**<br>திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு |

கழக நிர்வாகிகள், அணியின் மாவட்ட நிர்வாகிகள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**எஸ்.கே.பி.கருணா பி.இ.எம்.பி.ஏ.**
செயலாளர்
தி.மு.க. பொறியாளர் அணி